# மதுரை கூடலரங்கம் 2013

## நல் ஆளுகைக்கான சமூகத் தலைமை

(ஓர் மாநில அளவிலான கருத்துப்பட்டறை)



செப்டம்பர் 11, 2013

தமுக்கம் மைதானம், மதுரை

# மதுரை கூடலரங்கம்

எழுத்துக்கள், இலக்கியங்கள், நீதிநெறிகள் என பன்னெடுங்காலமாக பண்பாட்டுத்தளமாக விளங்கிவரும் மதுரை மானுட வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. அந்த வகையில் மதுரையிலிருந்து வளர்ச்சிப் பணியாற்றிவரும் தானம் அறக்கட்டளை 2003ஆம் ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வளர்ச்சி சார்ந்த கருத்துக்களை வெளிக்கொணர்ந்து செயலாற்ற மதுரை கூடலரங்கம் என்ற நிகழ்வை மதுரை தமுக்கம் திடலில் நடத்தி வருகிறது. ஒவ்வொரு மதுரை கூடலரங்கிலும் ஒரு வளர்ச்சி சார்ந்த கருத்தை மையப்படுத்தி நிகழ்வு நடைபெறும்.

ஆறாவது மதுரை கூடலரங்கம் 2013 நிகழ்வானது வளர்ச்சிக்கான ஆளுகை (ஆட்சி) என்ற கருத்தை உள்ளடக்கி செப்டம்பர் 11ல் தொடங்கி 15 வரை மக்கள் மாநாடு, கருத்தரங்கம், கருத்துப்பட்டறை, Exibition என பல்வேறு நிகழ்வுகளை நடத்துகிறது. இதில் அரசு துறை சார்ந்த அதிகாரிகள் மக்கள் அமைப்பைச் சார்ந்தவர்கள், தன்னார்வ அமைப்பைச் சார்ந்தவர்கள், தனியார் நிறுவனங்கள், ஆர்வலர்கள், leaders & Associates பொது மக்கள் என பல்வேறு தரப்பட்டோர் கலந்துகொண்டு வளர்ச்சி சார்ந்த கருத்தினை பகிர்கின்றனர், பயன்பெறுகின்றனர்.

# பின்னணி

இன்றைய சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான காரணிகளில் முதன்மையாக இருப்பது ஒரு சீரிய தலைமையேயாகும். மிகச்சிறந்த தலைவர்களே தமது பண்புகளால் கொள்கைப்பிடிப்பால், செயல்பாடுகளால் பல தலைமுறைகளாக நினைவு கூறப்படுகிறார்கள். இந்நிலையில் ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையில் இயங்கும் நமது சமூகக் குழு அமைப்பில் தலைவர்களது பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆயினும் தலைமைத்துவம் என்பது ஒருவர் பிறக்கும் போதே நிர்ணயிக்கப்படும் தன்மையல்ல. சமூக அக்கறையால், சூழ்நிலையால் ஏற்படும் நிர்ப்பந்தங்களால், சிறந்த தலைவனின் நேரடி உருவாக்கத்தாலும் அவர்களது கவனமான பயிற்சி முயற்சிகளினாலும் தலைவர்கள் உருவாகிறார்கள் ஆக, தலைவர்கள் பெரும்பாரும் உருவாகிறார்கள் என்பது தெளிவு.

சுய உதவிக்குழு என்னும் சமூகக் குழுவில் சிறந்த ஆட்சி செய்தவர்கள் உள்ளாட்சி அமைப்பில் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கும் போது அங்கு நல்லாட்சி தருகிறார்கள் என்பதை நாமறிகிறோம். கிராம அமைப்புகளில் நேர்மை என்னும் பண்பை வாழ்வின் இறுதிவரை கடைபிடித்து மற்றவர்களுக்கும் கற்றுகொடுத்தவர்களை நாம் கண்டுகொண்டுதான் இருக்கிறோம். நாம் பெறிதும் மதிக்கின்ற இந்தி ஜனநாயகத்தை நெறிப்படுத்துகின்ற பணியை அவ்வப்போது சமூகக் குழுக்கள் நல்லதொரு பங்கை ஆற்றிவருவது மறுப்பதற்கில்லை. நல்லாட்சி சமூக தளத்திலிருந்தே தொடங்குகிறது. அதுவே நாட்டின் அரசியல் தளத்தில் கோலோச்சுகிறது. நல்லாட்சி சமூக தளத்தில் மலரும் போது அரசியல் தளத்தில் நல்ல விதை விழும். நாம் எதிர்பார்கின்ற விருட்சம் இந்தியத் திருநாட்டில் பயன்கொடுக்கும்.



# நோக்கம்

- சமுகத் தலைவர்கள் எப்படி உருவாகின்றார்கள் என்பதை அறிவது
- எவ்வாறு உருவாக்கப்படுகிறார்கள் என்பதை தெரிவது
- தலைவர்களாவது காலத்திற்கு நாம் செய்யும் கடமையென்பதை உணர்வது
- சிறந்த சமூகத் தலைவர்களால் நல் ஆளுகை உருவாவதை அறிவது



# நிகழ்ச்சிகள்

- இறைவணக்கம்
- வரவேற்புரை மற்றும் கருத்தரங்க அறிமுக உரை
- பங்கேற்பாளர்கள் மற்றும் விருந்தினர்கள் அறிமுகம்
- சமூகக் குழுக்களில் தலைமை
- வழிகாட்டுக் கட்டுரை பகிர்வு
- நல்லாட்சிக்கான சமூகத்தலைமையில் காந்தியக் கோடுகள் முன்னோடிக் கட்டுரை பகிர்வு
- சமுகக் குழுத் தலைவர்களின் அனுபவ பகிர்வு Associates experience sharing
- சிறு குழு விவாதம்
- சிறு குழு விவாத தொகுப்பு
- செயல்திட்டங்கள் ~ பிரகடனங்கள்
- நிறைவுறை மற்றும் நன்றியுரை



# பங்கேற்பாளர்கள்

தானம் அறக்கட்டளை வறுமை குறைப்பிற்கும் சுற்றுச் சூழலைப் பேணுதலுக்கும் உருவாக்கியுள்ள மக்கள் அமைப்புகளின் (சமூகக் குழுக்களின்) தலைவர்கள், vement workers/Associates பணியாளர்கள், NGO Ftaff & Workers, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆர்வலர்கள் மற்றும் தானம் அறக்கட்டளை பணியாளர்கள்.

இடம் : தமுக்கம் மைதானம், மதுரை (10.00 AM to 5.00 PM)

நாள் : 11 செப்டம்பர் 2013, புதன்கிழமை.

# தானம் மக்கள் கல்வி நிலையம்

தானம் மக்கள் கல்வி நிலையம் தானம் அறக்கட்டளையால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனமாகும். இங்கு மக்கள் தலைவர்கள்,உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பண்புகளின் அடிப்படையில் திறமைகளை வளர்த்து மக்கள் நிறுவனங்களின் நிலைத்த நீடித்த வளர்ச்சிக்கு அடிப்படையாக திகழ்கிறது. கல்வி நிலையத்தில் வளர்ச்சி மேலாண்மை பற்றிய கல்வித்திட்டங்கள், பயிற்சிகள், கருத்தரங்குகள், ஆராய்ச்சிகள், பட்டறிவு பயணங்கள் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது. அஞ்சல் வழி கல்வித்திட்டத்தையும் மக்கள் பயிற்றுநர்களுக்கு பயிற்சியாளர் பயிற்சிகளையும் வழங்கி மக்கள் நிறுவங்களின் கல்வி களஞ்சியமாக விளங்கி வருகிறது.



## தொடர்புக்கு


**சி.கண்ணன்**

9487143479

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

தானம் மக்கள் கல்வி நிலையம்,

புல்லூத்து அஞ்சல்,

மதுரை – 19.

0452 – 2475305

Email: dpa@dhan.org